**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண். 678 /2024 நாள்- 11.12.2024

**வா.சா.2-**

**வா.சா.2- ன் குறுக்கு விசாரணை பிரதிவாதிகள் தரப்பில்** -

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து தான் அழைப்பாணை வந்தது. நிருபணவாக்குமூலத்தை வாதியின் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு செல்லவில்லைநேரடியாக நீதிமன்றத்திற்கு தான் வந்தேன். அதற்கு முன்பாக வாதியையோ வாதியின் வழக்கறிஞரையோ நான் சந்திக்கவில்லை. வாதியின் வழக்கறிஞரிடம் இருந்து தான் நான் முதல் விசாரணைக்கு கையொப்பம் செய்து கொடுத்தேன். முதல் விசாரணையில் எத்தனை பாராக்கள் தட்டச்சு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையின் நிருபணவாக்குமூலத்தை படித்துப்பார்க்கவில்லைஎன்றால் சரிதான். நான் வாதியின் சொந்த அக்காவை தான் திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரிதான். வாதி மனைவி காவல் நிலையத்தில் புகார் கொடுத்த போது காவல்நிலையத்திற்கு சென்றேன். உயர்நீதிமன்றத்திற்கு வாதி மனைவியுடன் நான் சென்றதில்லை. உயர்நீதிமன்றத்தில் என் மைத்துனர் என்னை யாரும் கடத்தவில்லை நானாக தான் சென்றேன் என்று வாக்குமுலம் கொடுத்த விவரம் பற்றி எனக்கு தெரியாது. வாதி கேரளாவிற்கு எதற்காக சென்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது. உயர்நீதிமன்ற விசாரணைக்கு பிறகு வாதி, 2ம் பிரதிவாதிக்கு இடையே சமரசம் ஏற்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்னை சாட்சி கையொப்பம் செய்ய 2ம் பிரதிவாதி தான் அழைத்தார் நான் போகும் போது ஆதார் கார்டை கொண்டு சென்றேன். வா.சா.ஆ.1-ன் பத்திரத்தில் கிரையம் கொடுப்பதாக தான் வாசகங்கள் உள்ளது என்று சொன்னால் காலி இடத்தை கிரையமாக தான் எழுதிக் கொடுக்கப்பட்டது.

அந்த சமயத்தில் எனக்கும் வாதிக்கும் இடையே பிரச்சனை இல்லை. நல்ல உறவில் தான் இருந்தோம். நான் என் மைத்துனரிடம் அன்றேய தினம் கிரைய ஆவணத்தில் கைகயொப்பம் செய்யவேண்டாம் என்று கூறவில்லை. வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையே எந்த பிரச்சனையும் கிடையாது என்று சொன்னால் சரிதான். வாதிக்கும் 2ம் பிரைதிவாதிக்கு இடையே பிரச்சனைக்கும், 1ம் பிரதிவாதிக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல..1ம் பிரதிவாதி குடும்பத்தை பற்றி எனக்கு தெரியும். காய்கறி கடை வைத்துள்ளார். 1ம் பிரதிவாதி யின் சித்தப்பா பலசரக்கு கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வெளியூரில் கருப்பபட்டி வியாபாரம் செய்து வருகறிர் என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு என்ன தொழில், என்ன வருமானம் என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு வாதி கிரையம் கொடுத்த பின்பு நானும் வாதியும் மோசடி செய்வதற்காக பொய்யாக வழக்கு தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.